[2011 ஜனவரி 12

பல கோரிக்கைகளை முன் வைத்திருக்கிறார்கள். புதிய ஆரம்ப சுகாதார நிலையம், மருத்துவமனைக் கருவிகள் மற்றும் மருத்துவமனைக்கு மருத்துவர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மருத்துவமனை இப்போது நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். மேலும், அதற்காக அரசுக்கு இங்கே பாராட்டுத் தெரிவிக்கமாட்டார்கள். ஏனென்றால் அந்தக் கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம் மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்களை நாங்கள் நியமனம் செய்திருக்கின்றோம். சிறப்பு மருத்துவர்கள், ஆர்த்தோ போன்ற மருத்துவர்கள் வேண்டுமென்று யாராவது கேட்டால் சிறப்பு மருத்துவர்கள் அங்கே வருவதற்கு வாய்ப்பு இருந்தால், நியமனம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஏற்படுகின்ற காலிப் பணியிடங்களை உடனுக்குடன் தேர்வு செய்து, கிட்டத்தட்ட 40 தடவை இங்கே நேர்காணலுக்காக மருத்துவர்களை அழைத்து நாங்கள் பணியமர்த்திக் கொண்டிருக்கிறோம். ஓய்வு பெறுகின்ற இடங்களில் நாங்கள் அடிக்கடி இதுபோன்று செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், கடந்த 6 மாதத்திற்கு முன்பாக நாங்கள் காஞ்சிபுரம் மருத்துவமனைக்குச் சென்றோம். எங்களுடன் சட்டமன்ற உறுப்பினரே வந்தார்கள், பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

நியாய விலைக் கடை

104343—திரு. சி. கோவிந்தசாமி:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், கருவம்பாளையம் 2-வது நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 ஜனவரி 12]

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், கருவம்பாளையம் 2—வது நியாய விலைக் கடையிலிருந்து 915 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஏ.பி.டி. ரோடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை ஆரம்பிக்கப்பட்டு 16—2—2010 முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி எழுப்புகிறபோது அங்கே அந்தக் கடை பிரிக்கப்படாத ஒரு நிலை இருந்த காரணத்தினால் அது பிரிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து இந்தக் கேள்வியை எழுப்பினேன். இந்தக் கேள்வி அவைக்கு வருவதற்கு முன்பாகவே அந்தக் கடை பிரிக்கப்பட்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கருவம்பாளையம் கடை மட்டுமல்லாமல், திருப்பூர் மாவட்ட அளவில் சற்றேறக்குறைய 132 புதிய ரேஷன் கடைகள் தற்போது கூடுதலாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்தினுடைய ஜனத்தொகையை மையமாக வைத்து நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே வந்து ஆய்வு செய்து, மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அனைவரும் இருந்து, தேவைகளையெல்லாம் கணக்கிலெடுத்து, கூடுதலாகக் கடை பிரிப்பது என்ற முடிவெடுத்து, இந்த அவை தொடங்குவதற்கு முன்னாலே முதல்நாள் வரையில் 132 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே வந்து துவக்கி வைத்தார்கள். மற்ற கடைகளையெல்லாம் நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, ரேஷன் கடையில் நீண்ட நெடிய queue என்ற நிலையை உண்மையிலேயே ஒரு முடிவுக்கு கொண்டு வந்ததற்காக திருப்பூர் பகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் மாநகரப் பகுதியில் மட்டும் 1 இலட்சத்து 37 ஆயிரம் ரேஷன் கார்டுகள் இருக்கின்றன. புறநகர்ப் பகுதியையும் சேர்த்தால்

[2011 ஜனவரி 12

சற்றேறக்குறைய 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட ரேஷன் கார்டுகள் உள்ள பகுதியாக திருப்பூர் இருக்கின்றது. தற்போது திருப்பூரில் ஒரே ஒரு வட்ட வழங்கல் அலுவலகம்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே, ரேஷன் கார்டுகள் கூடுதலாக உள்ளதால், அதைப் பிரிக்கவேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்று, கடந்த நிதிநிலை அறிக்கையின்போதே நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறீர்கள். ஆகவே, அந்தக் கூடுதலான வட்ட வழங்கல் அலுவலகம் எப்பொழுது செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகராட்சி, சேலம் மாநகராட்சி, ஈரோடு மாநகராட்சி ஆகியவையெல்லாம் மாநகராட்சியாக்கப்பட்ட பின்பு, அதிகமான குடும்ப அட்டைகள் இருப்பதை அரசு கருத்தில் கொண்டுதான் இந்த 3 மாநகராட்சிகளிலும், இரண்டு பகுதிகளாகப் பிரித்து, மாநகராட்சிக்கு என்றும், மாநகராட்சியைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு என்றும், இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, இரண்டு வட்ட வழங்கல் அலுவலகம் அமைக்கலாம் என்று அரசால் முடிவு செய்யப்பட்டு, வருவாய்த் துறைக்கு அந்தக் கோப்புகள் எல்லாம் சென்று, பிறகு நிதித் துறைக்குச் சென்று இப்பொழுது நம்முடைய துறைக்கு வந்திருக்கிறது. விரைவிலேயே அந்த 3 மாநகராட்சிகளினுடைய அலுவலகங்களைப் பிரித்து, 3 மாநகராட்சிகளிலும் வட்ட வழங்கல் அலுவலகங்கள் உடனே திறக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்த அலுவலகம் துவக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றி. இப்பொழுது கூடுதலாக ரேஷன் கார்டுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த 132 புதிய கடைகளில் 90 சதவிகித கடைகள் திருப்பூர் மாநகரத்திலும், தொகுதிக்குள்ளேதான் திறக்கப்பட்டிருக்கின்றன.

2011 ஜனவரி 12]

ஆகவே, கடை எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கிற காரணத்தால், வட்ட வழங்கல் அலுவலகம் என்பது குறுகிய, இட நெருக்கடியான ஓர் இடத்திலே இருக்கின்றது. ஆகவே, அந்த அலுவலர்களாலேயும் அங்கு செயல்பட முடியாத நிலை இருக்கிறது என்ற காரணத்தினால் இரண்டு அலுவலகமாகப் பிரிப்பதோடு, அதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களும், அதற்கென தனியாக வசதிகள் அடங்கிய ஒரு விரிவான கட்டடமும் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் உரிய ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற வட்டார வழங்கல் அலுவலகத்தை இரண்டாகப் பிரிப்பதைவிட அரசிலே இரண்டு வட்ட வழங்கல் அலுவலகங்களை துவக்கலாம் என்று ஒரு முடிவு செய்துவிட்ட காரணத்தினால், அதை விரைந்து செயல்படுத்தி இரண்டு அலுவலகங்களையும் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். இடங்களைப் பொறுத்தளவில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நாங்கள் கேட்டு இருக்கிறோம். அரசு கட்டடங்கள் இருந்தால் அதிலே இதனைத் துவக்கலாம் அல்லது வாடகைக் கட்டடத்திலேயாவது துவக்கலாம் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தத் தகவல் வந்தவுடனேயே புதிய வட்ட வழங்கல் அலுவலகமும் துவக்கப்படும், அலுவலகங்களும் இரண்டாக இருப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

27—

சுற்றுச்சுவர்

***115528—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—